12/12/2014

# UP-COUNTRY TAMIL PEOPLE AND THEIR LANGUAGE PROBLEM - A STUDY ON ESTATES AND OTHER ADMINISTRATIVE UNITS OF THE HALI-ELA DIVISIONAL SECRETARIAT.

EASTERN UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
14 DEC 2014
VANTHARUMOOLAI,
CHENKALADY.

MISS. DHUSHANTHINI PALANINATHAN

2008/2009

FAC393
Project Report
Library - EUSL

LIBRARY
06 MAR 2015
EASTERN UNIVERSITY, SRI LANKA

DEPARTMENT OF SOCIAL SCIENCES

(POLITICAL SCIENCE)

FACULTY OF ARTS AND CULTURE,

EASTERN UNIVERSITY, SRILANKA.

2014

PROCESSED
Main Library, EUSL

# முகவுரை

அரசறிவியல் சிறப்பு கற்கைநெறியின் ஒரு பகுதியை பூர்த்தி செய்யும் பொருட்டு செய்யப்படும் இவ்வாய்வானது "ஹாலி-எல பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெருந்தோட்டங்களிலும், நிர்வாக அலகுகளிலும்" மலையகத் தமிழ் மக்களின் மொழிப் பிரச்சினை குறித்து ஆய்வு செய்கிறது.

மலையகத் தமிழ் மக்கள் ஆரம்ப காலம் முதலே பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தே தங்களது வாழ்க்கையினை நடத்தி வருகின்றனர். அவற்றுள் காணப்படும் முக்கிய பிரச்சினையாக மொழி என்பது காணப்படுகின்றது. இது குறித்த ஆய்வுகள் மிக மிகக் குறைவானதாகும். ஆகவே தான் அவர்கள் நிர்வாக அலகுகளிலும், தங்களது வாழ்விடங்களிலும் மொழி தொடர்பில் எதிர்நோக்கும் சவால்களை வெளிப்படுத்தும் நோக்கில் இத்தகையதொரு ஆய்வினை செய்தல் வரவேற்கத்தக்க விடயமாகும்.

மலையக மக்களின் மொழிப் பிரச்சினை திட்டமிடலற்ற மொழி அமுலாக்கத்தினால் ஏற்பட்டதே ஆகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனையான 2020ம் ஆண்டில் மும்மொழி நாடு என்பதை நோக்கமாகக் கொண்டு மொழிப் பிரச்சினையை தீர்க்க மும்மொழி அமுலாக்கத்திற்கான பல செயற்பாடுகள் அரசு தரப்பில் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் அவை செயற்பாட்டு வடிவத்தினை பெறாமையே மொழிப் பிரச்சினைக்கு பிரதான காரணமாகும். இந்தவகையில் இவ்வாய்வு கட்டுரையின் 1ம் அத்தியாயம் ஆய்வு பற்றிய அறிமுகமாகும். இதில் ஆய்வு அறிமுகம், ஆய்வு நோக்கங்கள், ஆய்வு பிரச்சினைகள், கருதுகோள், ஆய்வு வினாக்கள், கோட்பாட்டு விளக்கம், ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு முறையியல் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது அத்தியாயம் ஆய்வுப் பிரதேசமும் கோட்பாட்டு விளக்கம் என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இதனுள் ஆய்வுப் பிரதேச அறிமுகம், மொழியின் முக்கியத்துவம், மொழிக் கொள்கையின் வகைகள், மொழிக்கொள்கை, முடிவுரை என்பன எழுதப்பட்டுள்ளன.

மூன்றாவது அத்தியாயம் மலையக மக்கள் புற்றிய நோக்கு எனும் தலைப்பாகின்றது. இதில் அறிமுகம், சமூக கட்டமைப்பு, பொருளாதாரம், அரசியல், பரம்பல், சமயங்கள், கலாசாரம், சுகாதார வசதிகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

நான்காவது அத்தியாயம் மொழி பற்றிய தேசிய மற்றும் சர்வதேச ஏற்பாடுகள் எனும் தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இதனுள் 1956ம் ஆண்டு சிங்கள மொழிச் சட்டம், அரச கரும மொழிகள் ஆணைக்குழு, அரச கரும மொழிகள் திணைக்களம், பண்டாரநாயக்கா-செல்வநாயகம் உடன்படிக்கை 1957 ஜுலை, தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம். இல.28. 1958, 1960 களில் இடம்பெற்ற பாடசாலை கல்வியிலான மொழி சீரமைப்புக்கள், டட்லி-செல்வா ஒப்பந்தம் 1965 மார்ச் 24, 1966ம் ஆண்டின் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்ட ஒழுங்கு விதிகள், 1972ம் ஆண்டு

முதலாம் குடியரசு அரசியல் யாப்பில் மொழிப் பற்றிய ஏற்பாடுகள், 1978 ஆம் ஆண்டு-இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம்-1987, இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்புக்கான பதினாறாவது திருத்தம்-1988, பொது நிர்வாக சுற்றறிக்கை இல.03/2007, பொது நிர்வாக சுற்றறிக்கை இல.07/2007 , அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 2014.9.29, 1966ம் ஆண்டின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேசப் பொருத்தனை (ICCPR), 1992ம் ஆண்டின் பிரதேச அல்லது சிறும்பான்மை மொழிகளுக்கான ஐரோப்பிய பட்டயம், தேசிய அல்லது இனம், மதம் மற்றும் மொழிரீதியான சிறும்பான்மையைச் சேர்ந்த ஆட்களின் உரிமைகள் மீதான பிரகடனம், தேசிய அல்லது இனம், மதம் மற்றும் மொழிரீதியான சிறும்பான்மையைச் சேர்ந்த ஆட்களின் உரிமைகள் மீதான பிரகடனம் என்பவை இடம்பெற்றுள்ளன.

ஐந்தாவது அத்தியாயமானது அரச மற்றும் பிரதேச நிறுவனங்களில் காணப்படும் மொழி அமுலாக்கமும், எதிர்கொள்ளும் சவால்களும் என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ளது. இதனுள் நிர்வாக அலகுகளில் மொழி திட்டமிடலும் அமுலாக்கமும், மலையகத் தமிழ் மக்கள் மொழி தொடர்பில் எதிர்நோக்கும் சவால்கள், அரசாங்கம் மொழிப் பிரச்சினையை தீர்க்க இதுவரை எடுத்த நடவடிக்கைகள், முடிவுரை என்பன இடம்பெற்றுள்ளன.

ஆறாவது அத்தியாயமானது முடிவுரையாக அமைந்துள்ளது. இதனுள் அறிமுகம், கோட்பாட்டுப் பரிசீலனை, கருதுகோள் பரிசீலனை, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மொழி பிரச்சினைக்கு முன்வைத்த சிபாரிசுகள் மற்றும் ஆய்வாளனின் சிபாரிசுகள், முடிவுரை என்பன இடம்பெற்றுள்ளன.

எனது இவ்வாய்வு மலையக மக்களின் பிரச்சினை அல்லது மொழிப் பிரச்சினை பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளபவர்களுக்கும், இம்மொழிப் பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுப்பவர்களுக்கும் இவ்வாய்வு ஒரு வழிக்காட்டியாக இருக்கும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

அரசறிவியல் கற்கை நெறி, ப.துஷாந்தினி

சமூக விஞ்ஞானங்கள் துறை, ஆய்வாளன்

கிழக்குப் பல்கலைக்கழகம் இலங்கை.

# பொருளடக்கம்

முகவுரை.....i

நன்றியுரை.....iii

உறுதியுரை.....iv

பொருளடக்கம்.....v

அட்டவணைகள்.....ix

வரைபடங்கள்.....ix

## அத்தியாயம் ஒன்று

## ஆய்வு அறிமுகம்

1.1 அறிமுகம்.....1

1.2 கோட்பாட்டு விளக்கம்.....3

1.3 ஆய்வு பிரச்சினைகள்.....4

1.4 ஆய்வு முக்கியத்துவம்.....6

1.5 ஆய்வின் நோக்கங்கள்.....7

1.6 ஆய்வு வினாக்கள்.....7

1.7 ஆய்வு கருதுகோள்.....8

1.8 இலக்கிய மீளாய்வு.....8

1.9 ஆய்வு முறையியல்.....10

1.10 ஆய்வு வரையறை.....11

1.11 அத்தியாய ஒழுங்கமைப்பு……………………………………………………12

அத்தியாயம் இரண்டு

ஆய்வுப் பிரதேசமும், கோட்பாட்டு விளக்கமும்

2.1 அறிமுகம்……………………………………………………………………14

2.2 ஆய்வுப் பிரதேசம்……………………………………………………………14

2.3 மொழியின் முக்கியத்துவம்……………………………………………………19

2.4 மொழிக்கொள்கை………………………………………………………………21

2.5 மொழிக் கொள்கையின் வகைகள்………………………………………………25

2.5.1 தன்வயமாக்கல் கொள்கை (Assimilation Policy)……………………………26

2.5.2 தலையிடாக் கொள்கை (Non-Intervention Policy)…………………………26

2.5.3 வேறுப்படுத்தப்பட்ட சட்டரீதியான அந்தஸ்துக் கொள்கை……………………26
(Differentiated Legal Statute Policy)

2.5.4 தனி மொழிவாதக் கொள்கை (Policy Of Monolingualism)…………………27

2.5.5 பன்மொழிக்கொள்கை (Multilingualism)……………………………………28

2.5.6 கலப்பு மொழிக்கொள்கை (Mixed Linguistic Policies)………………………29

2.6 முடிவுரை………………………………………………………………………29

## அத்தியாயம் நான்கு

## மலையக மக்களின் வரலாற்று பின்னணி

3.1 அறிமுகம்....31

3.2 மலையக மக்களின் சமூக கட்டமைப்பு....31

3.3 சனத்தொகை....33

3.4 சமயங்கள்....35

3.5 கல்வி நிலை....36

3.6 சுகாதாரம்....38

3.7 மலையக மக்களின் பரம்பல்....39

3.8 மலையக மக்களின் அரசியல்....42

3.9 மலையக மக்களின் பொருளாதாரம்....45

3.10 முடிவுரை....47

## அத்தியாயம் நான்கு

## மொழி தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச ஏற்பாடுகள்

4.1 அறிமுகம்....49

4.2 1956ம் ஆண்டு 33ம் இலக்க அரச கரும மொழிச் சட்டம்....50

4.3 அரச கரும மொழிகள் திணைக்களம்....51

4.4 பண்டாரநாயக்கா செல்வநாயகம் உடன்படிக்கை 1957 ஜூலை 26....52

4.5 தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டம். இல.28. 1958....52

4.6 1960 களில் இடம்பெற்ற பாடசாலை கல்வியிலான மொழி சீரமைப்புக்கள்……………......55

4.7 டட்லி-செல்வா ஒப்பந்தம் 1965 மார்ச் 24……………………………………………….....55

4.8 1966ம் ஆண்டின் தமிழ்மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்ட ஒழுங்கு விதிகள்……………..56

4.9 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியல் யாப்பில் மொழிப் பற்றிய ஏற்பாடுகள…...57

4.10 1978 ஆம் ஆண்டு-இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பு………60

4.11 இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கான……………………..66

பதின்முன்றாவது திருத்தம்-1987

4.12 இலங்கை சோசலிச ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்புக்கான……………………66

பதினாறாவது திருத்தம்-1988

4.13 அரச கரும மொழிகள் ஆணைக்குழு…………………………………………………......68

4.14 பொதுநிர்வாக சுற்றறிக்கை இல.03/2007……………………………………………..........69

4.15 பொது நிர்வாக சுற்றறிக்கை இல.07/2007…………………………………………….....70

4.16 அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 2014.9.29……………………………………….........70

4.17 1966ம் ஆண்டின் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான…………………………71

சர்வதேசப் பொருத்தனை (ICCPR)

4.18 1992ம் ஆண்டின் பிரதேச அல்லது சிறும்பான்மை மொழிகளுக்கான……………………..72

ஐரோப்பிய பட்டயம்.

4.19 தேசிய அல்லது இனம், மதம் மற்றும் மொழிரீதியான…………………………………………72

சிறும்பான்மையைச் சேர்ந்த ஆட்களின் உரிமைகள் மீதான பிரகடனம்

4.20 தேசிய அல்லது இனம், மதம் மற்றும் மொழி ரீதியான சிறும்பான்மையைச்……………..73

சேர்ந்த ஆட்களின் உரிமைகள் மீதான பிரகடனம்.

4.21 முடிவுரை……………………………………………………………………………74

## ஐந்தாவது அத்தியாயம்

## மொழிப் பிரச்சினையால் மலையக மக்கள் எதிர்நோக்கும் சவால்கள்.

5.1 அறிமுகம்……………………………………………………………………………76

5.2 நிர்வாக அலகுகளில் மொழி திட்டமிடலும், அமுலாக்கமும்…………………………….76

5.3 தடைக்கான காரணிகளும்……………………………………………………………78

5.3 ஹாலிஎல பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பெருந்தோட்ட மக்கள்………………………80

பொது நிர்வாகங்களில் மொழி தொடர்பில் எதிர்நோக்கும் சவால்கள்.

5.4 மொழிப் பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் இதுவரை எடுத்த நடவடிக்கைகள்…………87

I. அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள்.
II. அரச கரும ஆணைக்குழு மேற்கொண்ட நடவடிக்கைகள்.
III. அரச கரும திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகள்.

5.5 முடிவுரை…………………………………………………………………………......88

## ஆறாவது அத்தியாயம்

## முடிவுரை

6.1 கோட்பாட்டு பரிசீலனை ……………………………………………………………89

6.2 கருதுகோள் வாய்ப்பு பார்த்தல்………………………………………………………90